ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1573 - 2008 ඔක්තෝබර් 24 වැනි සිකුරාදා - 2008.10.24
1573 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1190 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1193 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1196 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) இலங்கை நிலவடிவமைப்புக் கலைஞர்கள் நிறுவகம்க சட்டமூலம் 2008, செத்தெம்பர் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) ஒதுக்கீட்டு சட்டமூலம் 2008, செத்தெம்பர் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) பிரதேசிய சங்வர்த்தனை வங்கி சட்டமூலம் 2008, செத்தெம்பர் 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும். வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, ஒற்றோபர் 31 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, ஒற்றோபர் 17 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை - வவுனியா

தேவையான வழங்கல்கள்/சேவைகள் - 2009

1. வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிற்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கு பின்வரும் வழங்கல்கள்/சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன :-

(அ) சமைக்காத/சமைத்த உணவு வழங்கல்கள்

(ஆ) அழுக்குத் துணிகள் சலவை செய்தல்

2. 2009, சனவரி 01 முதல் திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கான இவ்வழங்கல் சேவைகளுக்காக இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்வி ஆவணங்கள் 20.10.2008 தொடக்கம் 05.11.2008 ஆந் திகதி பி. ப. 3.30 மணி வரையும் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்படும். ஒரு வைத்தியசாலைக்கு/தொகுதிக்கு குறிப்பிட்ட ஒரு வழங்கல்/சேவைக்கான ஒரு ஆவண தொகுதி மட்டுமே வழங்கப்படும்.

3. அரசாங்க ஒப்பந்தத்தை செய்ய முடியாதவாறு தடைசெய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடை செய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

4. விண்ணப்பிக்க தகுதியானோர் கீழ் குறிப்பிடப்படும் தொகையை செலுத்துவதுடன், உணவு வழங்கல், சலவை செய்தல் என்பவற்றிற்கான பெறுமதி ஆவணத்தினையும் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் சமர்பித்து கேள்வி ஆவணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 11. 11. 2008 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கிடைக்கக்கூடியவாறு, ''தலைவர், கேள்விச்சபை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, மன்னார் வீதி, வவுனியா" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாக அலுவலக கேள்வி பெட்டியிலோ இட முடியும்.

5. **வைப்புத்தொகைகளும் ஆவணங்களும் :**

***அ. சமைக்காத/சமைத்த உணவு வழங்கல் :***

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை (ரூபா) | பெறுமதி ஆவணம் (ரூபா) |
|---|---|---|---|
| ஆதார வைத்தியசாலை (வகை B) – 01 (செட்டிக்குளம்) | 500.00 | 25,000.00 | 75.000.00 |
| பிரதேச வைத்தியசாலைகள் - 07 (உலுக்குளம், நெடுங்கேணி பூவரசங்குளம், புளியங்குளம், நேரியக்குளம், சிதம்பரபுரம், மாமடுவ) | தலா 250.00 | தலா 15,000.00 | தலா 25,000.00 |
| மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை 01 (பம்பைமடு) | 250,00 | 25,000.00 | 50,000.00 |

***ஆ. அழுக்குத்துணிகள் சலவை செய்தல் :***

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை (ரூபா) | பெறுமதி ஆவணம் (ரூபா) |
|---|---|---|---|
| ஆதார வைத்தியசாலை (வகை – B) – 01 (செட்டிக்குளம்) | 150.00 | 5,000.00 | 15,000.00 |
| பிரதேச வைத்தியசாலைகள் 07 (உலுக்குளம், நெடுங்கேணி பூவரசங்குளம், புளியங்குளம், நேரியக்குளம், சிதம்பரபுரம், மாமடுவ) | தலா 100.00 | தலா 1,500.00 | தலா 5,000.00 |
| மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை 01 (பம்பைமடு) | 100.00 | 1,500.00 | 5,000.00 |

***இ. ஆவணங்கள் :***

(1) 01. 10. 2008 ஆந் திகதிக்கு பின் அந்தந்த பிரதேச செயலாளரிடம் இருந்து பெறப்பட்ட தமது சொத்துக்களின் பெறுமதி உறுதிப்படுத்தும் சான்றுக் கடிதமும் (பி. எஸ். எம் 21, பொது 170 படிவம்) அல்லது வங்கி உத்தரவாத கடிதம்

(2) ஏற்கனவே சேவையினை வழங்கி வரும் ஒப்பந்தக்காரர் எதிர் வரும் காலங்களிற்கு புதியவர்களாகவே கருதி தீர்மானம் எடுக்கப்படும்.

(3) கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும் போது சமுகமளிக்கலாம்.

(4) கேள்வித் தொடர்பான கேள்விச் சபையின் தீர்மானவே இறுதித் தீர்மானமாகும்.

(5) மேலதிக விபரங்களை நேரடியாகவோ அல்லது தொலைபேசி இலக்கம் 024 – 2222140 ஊடாகவோ அல்லது கணக்காளர் பி. சு. சே. பணிமனையில் பெற்றுக்கொள்ளவும்.

(வைத்திய கலாநிதி) மு. மகேந்திரன்.
பி. சு. சே. பணிப்பாளர்,

பி. சு. சே. பணிமனை,
வவுனியா.
10 - 683

---

**வவுனியா பொது வைத்தியசாலை**

தேவையான வழங்கல்கள் /சேவைகள் - 2009

வவுனியா பொது வைத்தியசாலைக்கு பின்வரும் வழங்கல் சேவைகளுக்கான பெறுகைகள் 2008, திசெம்பர் 21 ஆந் திகதி முதல் 2009, டிசம்பர் 20 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கு கோரப்படுகின்றன.

1. **வழங்கல்கள்/சேவைகளின் விபரமும் வைப்புத் தொகைகளும்** :

| இல. | விபரம் | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூபா) | பெறுமதி ஆவணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| (அ) | உணவு வழங்கல் (சமைத்த, சமைக்காத) | 1,000.00 | 50.000.00 | 250,000.00 |
| (ஆ) | அழுக்கு - துணிகளை சலவை செய்தல் | 500.00 | 15,000.00 | 75,000.00 |
| | தொகுதி I தொகுதி II | 500.00 | 15,000.00 | 50,000.00 |
| (இ) | பாதுகாப்பு சேவை | 1,000.00 | 50.000.00 | - |
| (ஈ) | துப்பரவு சேவை | 1,000.00 | 50,000.00 | - |
| (உ) | கணனி பராமரிப்பு | 500.00 | 10,000.00 | - |
| (ஊ) | குளிரூட்டி பராமரிப்பு | 1,000.00 | 15,000.00 | - |
| (எ) | பிணவறை குளிரூட்டி பராமரிப்பு | 1,000.00 | 5,000.00 | - |
| (ஏ) | மின் உயர்த்தி பராமரிப்பு சேவை | 2,000.00 | 25,000.00 | - |

2. **பெறுமதி ஆவணம்**.- 15.10.2008 ஆந் திகதிக்கு பின்னர் அந்தந்த பிரதேச செயலாளரிடம் இருந்து பெறப்பட்ட பெறுமதி உறுதிப்படுத்தும் சான்றுக் கடிதம் (''அ" விற்கும் ''ஆ" விற்கும் மாத்திரம் பொது 170 படிவம்) சமர்ப்பித்தல் வேண்டும். அல்லது இத்தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் இருந்து வங்கி உத்தரவாதப்பத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும். ஏற்கனவே பொது வைத்தியசாலையில் ஒப்பந்த

சேவையில் ஈடுபடுவர்களும் பெறுமதி ஆவணத்தை புதிதாக விண்ணப்பம் செய்து சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வகையிலும் முன்னைய ஒப்பந்தத்துடன் இவற்றை தொடர்புபடுத்தாது புதிதாக விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

3. **வைப்புக்கள்**.-பெறுகைக்கான வைப்புத் தொகைகளை (மீளளிக்கப்படாத, மீளளிக்கப்படும்) பொது வைத்தியசாலை, நிதி முகாமைத்துவ அலகில் உள்ள கொடுப்பனவு கிளையில் சமர்ப்பித்து பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளலாம். தெரிவு செய்யப்படாத பெறுகை மனுதாரர்களுக்கு பெறுகைகளுக்கான ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டதும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணம் மீளளிக்கப்படும்.

4. **வியாபார பதிவு சான்றிதழ்**.- பெறுகைப்பத்திரம் கோரும் நிறுவனங்கள் வியாபார பதிவு படிவத்தின் மூலப்பிரதியின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. **அனுபவ சான்றிதழ்**.- கடந்தகால, நிகழ்கால அனுபவ சான்றிதழ்களையும் பெறுகை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். காவல் சேவை வழங்கும் நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பதற்கான அத்தாட்சிப்பத்திரத்தின் மூலப்பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

6. **வரி**.- உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரிச் சட்ட ஏற்பாடுகளுக்கமைய சகல வரி அறவீடுகளுக்கும், சகல வரி செலுத்துதல்களுக்கும் அனைத்து ஒப்பந்தக்காரர்களும் உட்படுத்தல் வேண்டும்.

7. **பெறுகைப்படிவங்கள் /ஆவணங்கள்**.- பெறுகை ஆவணங்கள் 24.10.2008 ஆம் திகதி தொடக்கம் 07.11.2008 ஆந் திகதி மதியம் 12.00 மணி வரையும் வவுனியா பொது வைத்தியசாலை நிதி முகாமைத்துவம் அலகின் கணக்கு கிளையின் வேலை நேரங்களில் வழங்கப்படும். பெறுகைப்படிவங்கள் அனைத்தும் இரு பிரதிகளில் முதலாம் பிரதி, இரண்டாம் பிரதி என குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

8. **பெறுகைகள் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முறை**.- சுகல முத்திரையிடப்பட்ட பெறுகைகளும், "தலைவர், பெறுகைகள் குழு, பொது வைத்தியசாலை, வவுனியா", என்ற முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் "வழங்கல்கள்/சேவைகள் 2009........" என குறிப்பிட்டு இங்கு கோடிட்ட இடத்தில் சேவையின் தன்மையும் குறிப்பிடப்படல் வேண்டும். நேரடியாக வழங்கினால் பெற்றுக்கொண்டதற்கான பற்றுச்சீட்டு வழங்கப்படும். ஒவ்வோர் வழங்கல்கள், சேவைக்கும் தனித் தனியாக விண்ணப்பித்தல் வேண்டும். பெறுகைகள் வைப்புத் தொகையை செலுத்தியதற்கான பற்றுச் சீட்டின் பிரதியை பெறுகைப் பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

9. **இறுதி திகதி**.- சகல முத்திரை இடப்பட்ட பெறுகைகளும் 14.11.2008 மு. ப. மணிவரை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்

10. **பெறுகைகள் திறத்தல்**.- பெறுகை நேரம் முடிவடைந்ததன் அடுத்து பெறுகைப்பத்திரங்கள் 14.11.2008 மு.ப. 10.00 மணிக்கு திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ பெறுகைகள் திறக்கும்போது சமுகமளிக்கலாம். பெறுகை நிபந்தனைகளுக்கு அமைவாக அனுப்பப்படாத ஆவணங்களும் பூரணமாக நிரப்பப்படாத நடைமுறை விலைகளுடன் ஒவ்வாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். மேற்படி பெறுகை கோரல்களை இரத்து செய்யவோ, நிறுத்தி வைக்கவோ, பகுதியாக வழங்குவதற்கோ, புதிதாக கோருவதற்கோ பெறுகைகள் குழுவுக்கு பூரண அதிகாரமுண்டு. பெறுகை தொடர்பான பெறுகைகுழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும். மேலதிக விபரங்களை 060 – 2241561 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்துகொள்ளலாம்.

தலைவர்,
பெறுகைகள் குழு,
பொது வைத்தியசாலை.
வவுனியா.

10 - 703

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) பிரிவின் அடிப்படையில் கீழ்க்குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2008.09.26 ஆந் திகதி கூட்டு இணைக்கப் பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம்.*

*கம்பனியின் பெயர்:* ஜே. ஜே. பீட் அன்ட் பார்மா (பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* பிவி 65696
*கம்பனி பதிவுசெய்யப்பட்ட முகவரி :* இல. 14/6, கவிகரா பீதார ரோட், கோட்டை

பீஸ்னஸ் செக்ரடேரியல்
சேவிஸ்சஸ (பிரைவேட்) லிமிட்டெட்
என்(பீவீஎஸ்) 20360,
கம்பனி செயலாளர்கள்.

10-695

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) பிரிவின் கீழ் அறிவித்தல்.

*கம்பனியின் பெயர்:* கிலிட் சோன் (பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* பிவி 65351
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2008 ஆகஸ்ட் 29
*கம்பனி பதிவுசெய்யப்பட்ட முகவரி :* இல. 87/2A, கண்டி வீதி, மிரிஸ்வத்த, கம்பஹா.

செயலாளர்கள்.

10-643

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) பிரிவின் கீழ் அறிவித்தல்.

*கம்பனியின் பெயர்:* ஹாஷ்வென்சஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* பிவி 65487
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2008, செத்தெம்பர் 10
*கம்பனி பதிவுசெய்யப்பட்ட முகவரி :* இல. 73/16, சல்மல் பிளேஸ், தளபத்பிட்டிய வீதி, எம்புல்தெனிய.

செயலாளர்கள்.

10-642

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) பிரிவின் பிரகாரம், பின்வரும் கம்பனிகள் கூட்டிணைப்புக்கான அறிவித்தல் விடுக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்:* எஸ்நா விலாஸ் (தனியார்) வரையறுக்கப்பட்டது
*கம்பனியின் இலக்கம் :* பிவி 65569
*கம்பனி பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் :* இல. 87, பார்ன்ஸ் பிளேஸ் கொழும்பு - 07.

மேற்கூறப்பட்ட கம்பனி சார்பாக,

பிஸ்னஸ் இன்டலிஜன்ஸ் (தனியார்)
வரையறுக்கப்பட்ட நிறுவனம்
செயலாளர்கள்.

இல. 8 டிக்கல் றோட்,
கொழும்பு - 08.

10-644

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், கீழ்க்காணும் கம்பனி பதிவு செய்யப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது.*

*கம்பனியின் பெயர்:* எஸ். என். ரிச் ஜலப் இன்டர்நெஷனல் (பிரைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம் :* பிவி 65548
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2008, செத்தெம்பர் 15 ஆந் திகதி
*கம்பனி பதிவுசெய்யப்பட்ட முகவரி :* 2 ஆம் மைல் கட்டை, கொக்காவில், முகுனுவட்டவன.

பணிப்பாளர்.

10-665

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) பிரிவின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ள கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.*

*கம்பனியின் பெயர்:* குறுப்போ ஆசிரி (பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* பிவி 65819
*கம்பனி பதிவுசெய்யப்பட்ட முகவரி :* இல. 101, சறுவில நல்லதரன்கட்டுவ, சிலாபம்.
*திகதி :* 08.10.2008

செயலாளர்கள்.

10-669

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) பிரிவின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ள கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது. என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத் தருகின்றோம்.*

*கம்பனியின் பெயர்:* நஜிஷா இன்ரநெஷனல் (பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* பிவி 65702
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2008.09.26
*கம்பனி பதிவுசெய்யப்பட்ட முகவரி :* இல. 231/1 ராசபானா வீதி, யிஹல பேமிரியா, கடுவளை.

கம்பனிச் செயலாளர்கள்.

10-670

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, நிறுவனங்கள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் நிறுவனம் தொடர்பான விடயங்கள் அச்சட்டத்தின் 9 ஆம் சரத்தின் (1) ஆம் உப சரத்தின் விதிகளுக்கமைய இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

*கம்பனியின் பெயர் :* வின்ரேன் எட்வர்டைசிங் (பிரைவேட்) லிமிட்டெட்

*கம்பனியின் இலக்கம் :* பி. வி. 65749
*பதிவு செய்யப்பட்ட திகதி :* 02.10.2008
பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : இல.: 408/சி, ஹைலெவல் றோட், பன்னிப்பிட்டிய

திரு. பிரான்சீஸ் டேவிட்,
பிரசித்த நொத்தாரிசு,
கம்பனிச் செயலாளர்,

இல. 214/26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு 10.

10- 562

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் அடிப்படையில், கீழ்க்குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2008.09.24 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம் :-

*கம்பனியின் பெயர் :* கோல்டன் டிரேகன் எக்ரி என்ஸ்போர்ட் (பிறைவேட்) லிமிட்டெட்.

*கம்பனியின் இலக்கம் :* பி. வி. 65671

பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : (2 ஆம் தளம், இல. 375, டாம் வீதி, கொழும்பு 12.

மனேஜ்மென்ற் அன்ட் பிஸ்னஸ்
அட்வைசறி சேவிஸ்சஸ் (பிரைவேட்)
லிமிட்டெட் (ஈ. ஓ. 259)

கம்பனிச் செயலாளர்கள்.

10- 535

---

## கம்பனி பதிவு செய்தல் தொடர்பான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் அடிப்படையில் கீழ்க் குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2008, ஆனி 27 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத் தருகின்றோம்.

*கம்பனியின் பெயர் :* கொன்கோர்ட் எக்ஸோரிக் வோயேஜஸ் லங்கா (பிறைவேட் ) லிமிட்டெட்.

*கம்பனியின் இலக்கம் :* பி. வி. 64579.
பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : இல. 74ஏ, 1/1, பார்க் வீதி, கொழும்பு - 02.

நிறுவனத்தின் முகாமையாளர்,
கோ- சேர்வ் (பிரைவேட்) லிமிட்டெட்.
கம்பனி செயலாளர்.

10- 496

---

## கம்பனி பதிவு செய்தல் தொடர்பான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவிற்கிணங்க, ஒரு கம்பனி கீழ்வரும் பெயர், முகவரியின் கீழ் கம்பெனிகள் பதிவாளர் அதிபதியினால் பதிவு செய்யப்படுகின்றது என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

(1) *கம்பனியின் பெயர் :* சன்செல் ஸ்பெஷல் பிஸஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
(2) *கூட்டிணைக்கப்பட்ட இலக்கமும் திகதி யும் :* பி. வி. 58663 23.09.2008.
(3) கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி இல. 4 தேவால ரோட், பாகொட, நுகேகொடை.

கன்சல்டன்ட் என்ட் கொபரேட் செகடரீஸ்
பிரைவேட், லிமிட்டெட்,
செயலாளர்கள்.
(தொலைபேசி இல. : 2689618).

10- 495

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்ட 410(1) ஆம் பிரிவின் கீழ், நிர்வாகஸ்தர் நியமனம் தொடர்பான அறிவித்தல்

ரிச்சர்ட் ரொபர்ட்ஸ் லங்கா (பிரை) லிமிடட் கம்பனி பதிவு இல. හ:ජඞී* 27936ී

கம்பனி பெயர் : பெயர் ரிச்சர்ட் ரொபர்ட்ஸ் லங்கா (பிரை) லிமிடட்
*கம்பனி முகவரி:* கீனகஹலந்த எஸ்டேட், கலகெடிஹேன, இலங்கை.
*நிர்வாகஸ்தரின் முழுப்பெயர்:* ஜெராட் ஜீவநந்தன் டேவிட்
*நிர்வாகஸ்தரின் அலுவலக முகவரி:* ඍඨදග ීඍී அசோசியேட்ஸ், லெவல் 4, இல. 02, காசல் லேன், கொழும்பு 04.
*நியமனத் திகதி:* 27.09.2008

ඨග ඎ டேவிட்
நிர்வாகஸ்தர்
ரிச்சர்ட் ரொபர்ட்ஸ் லங்கா (பிரை) லிமிடட்

10-525

### அட்டோர்ணி தத்துவப்பத்திரத்தை இரத்துச் செய்தல்

வெல்லம்பிட்டி, வெண்ணவத்த, இல. 231 இல் வசிக்கும் கங்காணிகே தயாசிறி சமரவீர என்றும் கங்காணமகே தயாசிறி சமரவீர என்றும் அழைக்கப்படுபவரால், அங்கொடை ஹிம்புட்டான வீதி, E/1/308 இலக்கத்தில் வசிப்பவரான கங்காணிகே திலக்கசிறி சமரவீர என்பவருடன் செய்துகொண்டதும் சட்டத்தரணி கே. வி. சிறிசேன என்பவரால் உறுதிப்படுத்தப்பட்டதுமான இல. 400 உடைய 2006.06.19 ஆந் திகதி சான்றுப்படுத்தப்பட்ட அட்டோர்ணி தத்துவப் பத்திரத்தை இத்தால் இரத்துச்செய்து கொள்வதாக சகல பொது மக்களுக்கும் அறிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் மேற்படி அட்டோர்ணி தத்துவப்பத்திரத்தின் மூலமாக கங்காணிகே திலக்கசிறி சமரவீர என்பவரால் செய்யப்பட்ட சகல கருமங்களும் இன்று முதல் காலாவதியாவதாகவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கங்காணிகே தயாசிறி சமரவீர எனும் /
கங்காணமலாகே தயாசிறி சமரவீர.

10-618

---

### 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

9 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கூட்டிணைத்தல் பற்றி இத்தால் அறியத்தருகிறோம் :-

கம்பனியின் பெயர் : திருகுமரன் புரிட் வேவ்ஸ் (பீவீரீ) லிமிட்டெட்
கம்பனியின் இல: பீ. வீ. 65495
பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலக முகவரி: இல. 55, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 2.
கூட்டிணைத்தல் திகதி : 2008, செத்தெம்பர் 11.

சபையின் கட்டளைப்படி

பிஸினஸ் சொலுயுசன்ஸ் அன்ட் செக்கட்டரீஸ்
(பிரைவேட்) லிமிட்டெட்.

10-524/1

---

### 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

9 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கூட்டிணைத்தல் பற்றி இத்தால் அறியத்தருகிறோம்.

கம்பனியின் பெயர் : சக்திதரன் வாட்டர் ஹைபிரிட்ஸ் (பீவீரீ) லிமிட்டெட்

கம்பனியின் இல: பீ. வீ. 65634

பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலக முகவரி: இல. 55, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 2.

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2008, செத்தெம்பர் 22.

சபையின் கட்டளைப்படி

பிஸினஸ் சொலுயுசன்ஸ் அன்ட் செக்கட்டரீஸ்
(பிரைவேட்) லிமிட்டெட்.

10-524/2

---

### 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

9 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கூட்டிணைத்தல் பற்றி இத்தால் அறியத்தருகிறோம்.

கம்பனியின் பெயர் : பீஸ்போக் லங்கா (பீவீரீ) லிமிட்டெட்
கம்பனியின் இல: பீ. வீ. 65496
பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலக முகவரி: இல. 285 கே, லோன் 07, மிலேனியம் சிட்டி, ஒருவல, அதுருகிரிய.
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2008, செத்தெம்பர் 11.

சபையின் கட்டளைப்படி

பிஸினஸ் சொலுயுசன்ஸ் அன்ட் செக்கட்டரீஸ்
(பிரைவேட்) லிமிட்டெட்.

10-524/3

---

### அட்டோர்ணித் தத்துவப்பத்திரத்தை இரத்துச் செய்தல்

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், மெனிக்ஹின்ன பொல்அம்பகோட்டுவ இல. 96 இல் வசிக்கும் கஹவத்தே ஹங்கலன் முதியன்சேலாகே சாமாவத்தீ குமாரிஹாமி ஆகிய நான், என்னால் பிரசித்த நொத்தாரிசு இநோகா கிம்ஹானீ ஜயலத்தினால் 2008, மாசி மாதம் 2 ஆந் திகதி எழுதிய அட்டோர்ணி தத்துவப்பத்திரம், 2008, புரட்டாசி 22 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்படும் என இத்தால் அறியத்தருகிறேன். இதன்படி இதற்குப் பிறகு கண்டி மாவட்டம் ராஜவெல்ல திகன “அத்தம் நிவாச”, இல. 4 இல் வசிக்கும் சமிந்த பிரியங்கர ஜயலத் இதைப் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது, அத்துடன் அட்டோர்ணித் தத்துவப்பத்திரம் செல்லுபடியற்ற தாக்கப்படுகிறது என்பதை இத்தால் இலங்கை பொதுமக்களுக்கும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

கே. எச். எம். சாமாவத்தீ குமாரிஹாமி.

5 ஒற்றோபர், 2008

10-516

# ஏல விற்பனைகள்

## செலான் வங்கி பி. எல். சீ. - கொள்ளுப்பிட்டி கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளே, பல்லேபத்து, தெகிவளை-மவுன்ட்லவேனியா பிரதேச சபை எல்லைக்குள் உள்ள கறன்டாகஹவத்தை என்றழைக்கப்படுகின்ற இடத்தை சேர்ந்த அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஜி. ஓ. ஆர். சில்வாவினால் அளந்து எல்லைகள் வரையறை செய்யப்பட்ட (உப பிரிவு துண்டு A பதிவு நில வரைவுபட இல. 1 தெகிவளை, பதிவுசெய்யப்பட்ட புத்தக இல. 43, வரிமதிப்பீட்டு இல. 73) மற்றும் 1.03.1986 ஆம் திகதியிடப்பட்ட துண்டு. இல. 1302, நில வரைவுபட இல. 1518 ஐ கொண்ட வட்டாரம் 12, மல்வத்த இல. 75, 75ஏ, 75பி, காலி வீதி, தெகிவளையில் அமைந்துள்ள ஐந்து தசம் ஏழு ஏழு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 5.77பே.) பரப்பளவு கொண்ட பெறுமதிவாய்ந்த காணி மற்றும் அதில் உள்ள மரம், செடி, கொடிகள் மற்றும் கட்டிடங்கள் அடங்கலாக உள்ள காணி, மேற்படி மவுட்லவெனியா காணிப்பதிவகத்தில் தெகி. 87/211, 212 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

### ஏல விற்பனை

*(கடன்பட்டோர் என்ற வகையில் தெகிவளையிலுள்ள பதிவு இல. N (PVS) 24672 கொண்டுள்ள இலங்கை குடியரசில் 1982 ஆம் ஆண்டின் கம்பனிச் சட்ட இல. 17 இன் கீழ் இல் உருவாக்கப்பட்டுள்ள ஒரு கம்பனியாகிய ஈ போன் கம்பனி (பிரைவேட்) லிமிட்டட்டிற்கு வழங்கப் பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பி. எல்.சீ. க்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து)*

மேலே விவரிக்கப்பட்டுள்ள காணியை நான் 2008, நவெம்பர் 20 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற வழி.**- தெகிவளை சந்தியிலிருந்து காலி வீதி ஊடாக கொழும்பு செல்லும் வழியில் 800 மீற்றர் தூரத்தில் வலது புறத்தில் அமைந்துள்ளது.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2008.05.16ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2008.03.23 ஆந் திகதிய ,சன்டே டைம்ஸ், மற்றும் ,லங்காதீப, மற்றும் 2008.03.26 மற்றும் 2008.03.27 ஆந் திகதிய ,வீரகேசரி, பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்துவீதம் (10%) ; (2) விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு ஒரு வீதம் (1%) ; ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2%) ; விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000 ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500 ; (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு அத்துடன் கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பி. எல். சீ. இல் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை “கொழும்பு 3, காலி வீதி, இல. 90, செலான் வங்கி பீ. எல். சீ., பொது முகாமையாளர் (சட்டம்) ” இடமிருந்து பெற்றுக்கொள்ளவும் பார்வையிடவும் முடியும். தொலைபேசி இல. 2456285, 2456263, 2456284.

துசித கருணாரத்ன (ச.நீ.),
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ.
தொலைபேசி இல. 2696155, 2572940.

10- 563

---

## மக்கள் வங்கி - ரதீகம கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச்சட்டத்தின் 29டி விதிமுறையின் கீழ் விற்பனை அறிவித்தல்*

***ரீதிகம நகரத்துக்கு அண்மையில் அமைந்துள்ள கட்டுதம்பலாஹேன என்ற காணியை பிரித்து வேறாக்கிய 01 ஆம் இலக்க காணியும் அதனுள் அமைந்துள்ள, பெறுமதிமிக்க கட்டிடம் உட்பட அனைத்தும் அடங்கலாக ஏலவிற்பனை***

**(பரப்பளவு : 0ஏ. 0றூ. 04பே.)**

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் என்னால் 2008. 11.11 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும்.

2002.11.29 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி, 2007.07.05 ஆந் திகதிய ‘‘தினமின’’, 2007.07.05, ஆந் திகதிய ‘‘டெய்லி நியூஸ்’’, 2008.07.05 ஆந் திகதிய ‘‘தினகரன்’’ என்பவற்றில் வெளியிடப்பட்டுள்ள ஏல விற்பனை அறிவித்தலுக்கு உங்கள் கவனத்தை செலுத்தவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் பாதை .**- ரிதீகம நகரத்தின் பிரதான பாதைக்கு முன்பாக அந்த பாதையோரமாக பாதைக்கு இடது பக்கமாக இந்த ஆதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- ஏலவிற்பனையின் இறுதியில் ஆதனத்தை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணத்தைச் செலுத்த வேண்டும் :-

(1) வாங்கிய விலையின் 10% ;
(2) மாகாண அதிகார சபையின் வரியாக 1% ;
(3) ஏல விற்பனைக் கமிஷனாக விற்பனை விலையின் 2 1/2 % ;
(4) எழுதுவினைஞர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;

(5) விற்பனைச் செலவுகள், வேறும் கட்டணம் இருப்பின் அந்தப்பணம்.
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

வாங்கிய விலையின் மிகுதி 90% மான பணத்தை விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மக்கள் வங்கியின் குருநாகல் பிரதேச அலுவலகத்தின் பிரதேச முகாமையாளரிடம் செலுத்த வேண்டும். தொலை பேசி : 037- 2222459 தொலை நகல் :- 037-2222338.

உரிமைப்பத்திரம் வேறு விபரங்களை மேற்கண்ட முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேற் கண்டவாறு பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தாவிடின் ஏற்கனவே செலுத்திய கொள்வனவு விலையின் 10% பணத்தை திருப்பிச்செலுத்தாமல் விடவும், மீண்டும் ஆதனத்தை விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

டபிள்யு. எம். ஐ. கல்லேல்ல (ஜே. பி)
நீதிமன்ற ஆணையாளர், அதிகாரம்
பெற்ற ஏல விற்பனையாளர், மதிப்பீட்டாளர்.

இலக்கம், 28, "புதிய சட்டத்தரணிகள் வர்த்தக கட்டிடத்தொகுதி",
குமாரதுங்க மாவத்தை,
குருநாகல்.

தொலைபேசி :- 037 -2220062

10-639

---

### இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்

#### சொத்து, நிலமனை ஏல விற்பனை

இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய 2008.08.22 ஆந் திகதி 1564 ஆம் இலக்க, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2008.08.14 ஆந் திகதிய "தினமின", "டெய்லிநியூஸ்", "தினகரன்", ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப் பட்ட அறிவித்தல் களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையம் நிலமனையையும் இல. 474, பிட்டகோட்டே, கோட்டே என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. ஆர். எஸ். மஹாநாம 2008.11.18 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறி விக்கப்படுகின்றது.

#### விற்பனைக்குரிய ஆதனம் தொடர்பான அட்டவணை

மேல்மாகாணம் களுத்துறை மாவட்டம், களுத்துறை தொட்டமுனே வடக்கு, களுத்துறை பெத்தயில் நாகொடயில் அமைந்த "ஓவன்லின் எஸ்ரேற்" என யாவரும் அறிந்ததும் தற்சமயம் அழைக்கப்படுவதும் ரி. பீ. இல. 54321 இல் விபரித்ததுமான "பின்கொலலந்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் ரீ. எவ். கொலத் தயாரித்த 1917 மார்ச் 17 திகதியிட்ட வரைபடம் இல. 401 இல் விபரித்த காணித்துண்டு வடக்கில் : அரசாங்கத்துக்குச் சொந்தமான மேற்குறிப்பிட்ட காணியும், அப்புஹாமி உரிமை கோரும் காணியும், கிழக்கில் அரசாங்கத்திற்கு சொந்தமான மேற்குறிப்பிட்ட காணியும் ; தெற்கில் : ஏ. என அடையாளமிட்ட அதே காணியின் ¼ பகுதியும்; மேற்கில் : வரைபடம் இல. 52415 இல் காணியும் எல்லை களாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 401 இன் படி ஒன்பது ஏக்கர் மூன்று றூட் இருபது பேர்ச்சுகள் (09 ஏ.3றூ. 20பே) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது களுத்துறை காணிப்பதிவகத்தில் ஜி 162/272 இல் பதிவு செய்யப் பட்டது.

மேற்குறிப்பிட்ட காணித்துண்டு உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. கே. மெரில் பி. பெரேரா தயாரித்த 2005, யூன் 14 திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 1718 இன் படி பின்வருமாறு விபரிக்கப் பட்டுள்ளது :-

மேல்மாகாணம், களுத்துறை மாவட்டம், களுத்துறை தொட்டமுனே வடக்கு, களுத்துறை பத்தேயில் களுத்துறை பிரதேச சபை எல்லைகளுள் (நாகொடை உப அலுவலகம்) களுத்துறை நாகொடையில் அமைந்த "ஓவன்லின் எஸ்ரேற்" என தற்சமயம் யாவரும் அறிந்ததும் "பின்னகொலலந்த" என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1718 இல் விபரித்த காணித்துண்டுகள் 02 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டுகள். வடக்கில் : அப்புஹாமி மற்றும் ஏனையோருக்குச் சொந்தமான காணியும் ; கிழக்கில் : பீ. டி. குணரத்ன, டி. ஏ. ராஜபக்ஷ மற்றும் நந்தசிறி குணசேகர ஆகியோருக்குச் சொந்தமான காணிகளும் றோட்டும் ; தெற்கில் : றோட், ஏலக்காணி மற்றும் மனோரி பிரியங்கா வீரசேகர, பந்துல சந்ரசிறி, டபிள்யூ. ஏ. லீலாவதி மற்றும் லம்பேர்ற் ஆகியோருக்குச் சொந்தமான காணிகளும் ; மேற்கில் : பிரதான றோட்டும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1718 இன் படி ஒன்பது ஏக்கர் இரண்டு றூட் இருபத்து எட்டு தசம் இரண்டு பேர்ச்சுகள் (9ஏ. 2றூ. 28.2பே) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

எம். ஜே. பி. சல்காது,
சிரேட்டமுகாமையாளர்.

இலங்கை மேற்றரக் கிளை,
பொரளை.

10 - 659

---

### இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974 ஆம் ஆணடின் 10 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்

#### சொத்து, நிலமனை ஏலவிற்பனை

இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய 2008.09.05 ஆந் திகதி 1566 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2008.08.28 ஆந் திகதிய "தினமின", "டெய்லிநியூஸ்", "தினகரன்", ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில்

விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 474, பிட்டகோட்டே, கோட்டே என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. ஆர். எஸ். மஹாநாம 2008.11.13 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**விற்பனைக்குரிய ஆதனம் தொடர்பான அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு, மாவட்டம் ஹோவாகம் கோரளை பல்லே பற்றுவில் கடுவெல பிரதேச சபை எல்லைகளுள் (பத்தரமுல்ல அலகு), தலங்கம தெற்கு கிராமத்தில் அமைந்த ''முடகலே", என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் டி. எஸ். எஸ். குருப்பு தயாரித்த 1998, சனவரி 27 திகதியிட்ட வரைபடம் இல. 696 இல் விபரித்த துண்டு 1பி என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு ; வடக்கில் : துண்டு 1 ஏயும் ; கிழக்கில் : துண்டு 1 சீ (10 அடி அகல பாதைக்கு ஒதுக்கப்பட்டது) தெற்கில் : எச். எம். சமரதாச உரிமைகோரும் காணியும் ; மேற்கில் : எம். பிரேமவதி பெரேரா மற்றும் ஏனையோர் உரிமைகோரும் காணியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 696 இன் படி பத்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 10.0பே) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் ஜீ 700/112 இல் பதிவு செய்யப்பட்டது.

அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 696 இல் விபரித்த துண்டு 1 சீ. மீதான (10 அடி அகல பாதைக்கு ஒதுக்கப்பட்டது) வழி உரிமை ஆகும்.

மேற்குறிப்பிட்டவாறு காணித் துண்டு உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் பீ. பீ. பிரேமதிலக்க தயாரித்த 2004, பெப்ரவரி 5 திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 221 இன் படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது:-

மேற்குறிப்பட்டவாறு தலங்கம தெற்கு கிராமத்தில் அமைந்த மிரிஸ்வத்த வரிமதிப்பிலக்கம் 159/45, ''முடகலே", என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 221 இல் விபரித்த துண்டு 1பி1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு ; வடக்கில் : றோட்டும் ; கிழக்கில் : றோட்டும் ; தெற்கில் : எச். எம். சமரதாச உரிமைகோரும் காணியும் ; மேற்கில் : எம். பிரேமவதி பெரேரா மற்றும் ஏனையோர் உரிமைகோரும் காணியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 221 இன் படி பத்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 10பே) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

டபிள்யு. பீ. கோனார,
கிளை முகாமையாளர்,

இலங்கை வங்கி,
கடவத்தை கிளை.

10 - 660

**மக்கள் வங்கி - ஹிக்கடுவை கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

**சொத்துக்கள் ஏல விற்பனை**

மக்கள் வங்கியினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், என்னால் 2008, நவெம்பர் 11 ஆந் திகதி மு. ப. 11.00 இங்கு கீழ் குறிப்பிடுகின்ற சொத்துக்கள் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விபரம்**

1. தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தின் வெல்லபட பத்துவை படுவனயில் அமைந்துள்ள "வெலேபட மிதிகஹவத்த" எனும் காணியை ஒன்றிணைக்கப்பட்ட துண்டான ஏ, 2ஏ, 3ஏ எனும் 39.4 பேர்ச்சஸ் கொண்ட மிகப் பெரிய காணியும் அணைத்து பயிர்ச்செய்கை, கட்டிடங்கள் உட்படாவாகும்.

2. மேலே குறிப்பிட்ட படுவனயில் அமைந்துள்ள ''வெலபட மிதிகஹவத்த" லொட் 5 இல் லொட் ட இனால் பிரிக்கப்பட்ட லொட் 01 எனும் 32.833 பேர்ச்சஸ் கொண்ட மிகப் பெரிய காணியும் அதிலுள்ள அனைத்துமாகும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 1995.12.15 ஆந் திகதியின் அரச வர்த்தமானிப் பத்திரிகையிலும், 1995.12.01 ஆந் திகதியின் தினமின, டேலிநிவூஸ், தினகரன் ஆகிய சஞ்சிகைகளிலும் பிரசுரமாகிய ஏலவிற்பனை பகுதியை கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**- கொழும்பிலிருந்து காலிக்கு செல்லும்போது தொடந்துவ படுவத பகுதிக்கு செல்லும்போது காணப்படும் ஓசன் பீச் கிளப் ஹோட்டல் அருகாமையில் (இதற்கு முன்னர் கி. மீ. 102 கனுவுக்கு அருகே) வீதியின் கடற்கரைக்கு முன்னாக இச் சொத்துக்கள் அமைந்திருக்கும்.

கொடுப்பனவு செலுத்தும் முறை.- வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் இறுதியாக கீழ்க் கண்ட படி பணமாக செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக உள்ளூர் அதிகாரிக்கு விற்பனை விலையில் 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 ½% (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனை செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனுமிருப்பின்) ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் காலி பஹல டிக்சன் வீதியில் அமைந்துள்ள இல. 22 இல் அமைந்துள்ள மக்கள் வங்கி, பிரதேச பிரதான அலுவலகம், முகாமையாளர்" இடம் செலுத்த

வேண்டும். தொலைபேசி இலக்கங்கள் : 091-2223563, 2232311, 2234171, 2234174; தொலைநகல் இல. : 091-2232230.

உரிமை கோரும் ஒப்பினையையும் மேலதிக விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம்.

மேற்குறிப்பிட்டபடி பணம் செலுத்திய 10 வீதத்துக்கான பணத்தை செலுத்தாது விடவும் மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்)
அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
வல்கம, மாத்தறை.
தொலைபேசி இல. : 041-2228731

10-630

---

**மக்கள் வங்கி - மாவத்தகம கிளை**

(பரப்பளவு : 0ஏ. 0ரூ. 5பே)

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் விற்பனை

**வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வேவுட வில்லி ஹத்பத்துவ திரகந்தஹுய கோரலை, மாவத்தகமையில் அமைந்துள்ள 'வளவ்வே வத்தை' என்ற காணிக்கு 1999. 09.19 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 1362 ஆம் இலக்க வரை படத்தின் 02 ஆம் இலக்க காணியும் அதற்குச் சொந்தமான மரம், செடி, பழவகை, கட்டிடம் அனைத்துமடங்கலாக ஏலவிற்பனை**

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு குறிப்பிட்ட சொத்து அமைந்துள்ள இடத்தில் என்னால் பிரசித்த ஏல விற்பனை செய்யப்படும்.

2003.11.21 ஆந் திகதிய இலங்கை அரசின் வர்த்தமானியையும் 2004. 08.19 ஆந் திகதி "டெய்லி நியூஸ்", 2004.08.19 ஆந் திகதிய "தினமின" 2004. 08.19 ஆந் திகதி "தினகரன்" பத்திரிகை களையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் பாதை**.- மாவத்தகம நகர மத்தியில் பிதான பாதையினருகே இடது பக்கம் அமைந்துள்ள 04 ஆம் இலக்க இடத்தில் இந்த ஆதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏல விற்பனையின் முடிவின்போது சொத்தை விலைக்கு வாங்கிய நபர் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு பணம் செலுத்த வேண்டும் :-

(1) தாம் வாங்கிய விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூராட்சி அதிகாரி சபையின் வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலவிற்பனை கமிஷனாக விற்பனை தொகையின் 2 ½% கமிசனையும் ;
(4) எழுதுவினைஞகளினதும் அறிவிப்பாளர்களினதும் கட்டண மாக ரூபா 500யும் ;
(5) விற்பனை செலவு மற்றும் ஏனைய செலவுகள் இருப்பின் அந்தப் பணத்தையும், ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணத்தையும் விலைக்கு வாங்கிய பணத்தின் மிகுதி 90% வீத பங்குப்பணத்தை ஏல விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் குருநாகல் மக்கள் வங்கி பிரதேச பிரதான முகாமையாளரிடம் செலுத்தப்படல் வேண்டும். தொலைபேசி : 037 - 2222453 தொலைநகல் : 037 - 2222338

உரிமைப்பத்திரம், மேலதிக விபரங்களையும் மேற் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேற் குறிப்பிட்டுள்ளபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத்தவறின் ஏற்கனவே செலுத்திய பணத்தின் 10% தையும் திருப்பிச் செலுத்தாமலிருக்கவும், மீண்டும் சொத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமையுண்டு.

டபிள்யு. எம். ஐ. கல்லேல்ல,
நீதிமன்ற ஆணையாளர், உத்தரவு பெற்ற
ஏலதாரர், மதிப்பீட்டாளர்,

இல. 28, "புதிய சட்டத்தரணிகள் கட்டிடத்தொகுதி",
குமாரதுங்க மாவத்தை,
குருநாகல்.
தொலைபேசி இல. : 037-2220062.

10-633

---

**மக்கள் வங்கி - அம்பலன்கொடை கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் விற்பனைஅறிவித்தல்

மக்கள் வங்கியால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, 2008.11.17 ஆந் திகதிய மு. ப. 11.30 மணிக்கு கீழ்கண்ட விபரங்களைக் கொண்ட சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரம்**.- தென் மாகாணத்தன் காலி மாவட்டத்திலே வெல்லபட பத்துவையில் கஹவ உடுவரகொடயில் அமைந்துள்ள லிந்தமுல்லவத்தை எனும் காணியின் இலக்கம் 4 எனும் துண்டுக்கு மானக திரு. ஜீ. எஸ். டபிள்யு. பெரேரா என்பவரினால் 1985.03.05 ஆந் திகதி ஒழுங்குசெய்யப்பட்ட இலக்கம் 3995 எனும் ஒரு றூட் ஒன்பது தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 9.50 பே.) கொண்ட மிகப்பெரிய காணியும் அதிலுள்ள அனைத்தும் பயிர்ச்செய்கை, கட்டிடங்கள் உட்பட்டதாகும்.

**மேலதிக விவரங்களுக்கு**.- 2008.07.11 ஆந் திகதிய அரச வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலுக்கிணங்க 2008.08.14 ஆந் திகதிய 'தினமின', 'டெய்லி நியூஸ்' சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனை அறிவித்தல் பகுதியை கவனத்திற் கொள்க.

**சொத்துக்களுக்கு பிரவேசிக்கும் வழி**.- காலியிலிருந்து அம்பலன் காடக்கு செல்லும்போது அகப்படும் கஹவ சந்தியிலிருந்து தாண்டிச் செல்ல 100 யார் அளவு சென்றதும், உடுவராகொட வழியாக

(ஆரியசேன த சொய்சா மாவத்தை) தென்படும். அவ்வழியாக புகையிரத பாதையில் செல்ல 200 மீற்றர் அளவு முன்னோக்கி செல்ல பாதையின் இடப்பக்கமாக இருக்கும் கிராமசபை வீதியில் 50 யார் அளவு சென்றதும் அவ்வழியாக வலப்பக்கமாக இச்சொத்துக்கள் அமைந்திருக்கும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.-** ஏல விற்பனையின் முடிவின்போது சொத்தை விலைக்கு வாங்கிய நபர் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு பணம் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூராட்சி அதிகாரி சபையின் வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு விற்பனை விலையில் 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலவிற்பனை கமிஷனாக விற்பனை தொகையின் 2 ½% கமிசனையும் ;
(4) எழுதுவினைஞர்களினதும் கூவுவோரினதும் கட்டண மாக ரூபா 500 ;
(5) விற்பனை செலவு மற்றும் ஏனைய செலவுகள் இருப்பின் அந்தப் பணத்தையும், ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம். கொள்வனவு விலையின் மிகுதி 90% வீத பங்குப்பணத்தை ஏல விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "காலி, பஹல டிக்சன் வீதி, இல. 22 மக்கள் வங்கிப் பிரதேச பிரதான அலுவலகம், முகாமையாளர்" இடம் செலுத்தப்படல் வேண்டும். தொலைபேசி : 091 - 2232311, 2234171, 2234785, 2223564 தொலைநகல் : 091 - 2232230.

உரிமைகோரும் ஒப்பினையையும், மேலதிக விபரங்களையும் மேற் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேற்குறிப்பிட்டுள்ளபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத்தவறின் ஏற்கனவே செலுத்திய பணத்தின் 10% தையும் திருப்பிச் செலுத்தாமலிருக்கவும், மீண்டும் சொத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமையுண்டு.

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்),
அதிகாரம்பெற்ற ஏல விற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இல. : 41-2228731.

10-631

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.